1974 மார்ச் 15]

ஏழைகளுக்கு எல்லாம் நிலம் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே அரிசன நலத் துறையின் மூலமாக ஆர்ஜிதம் செய்யப்படுகிற நிலங்கள் எல்லாவற்றையும் வேறு ஒரு துறையினிடத்திலே கொடுத்தால் அவர்கள் 2 செண்ட்டுகள்தான் கொடுக்கிறார்கள், அக்வயர் பண்ணிய நிலமே மீதம் ஆகிவிடுகிறது என்ற நிலைமை இருப்பதால் அரிசன நல இலாகாவனாலேயே அக்வயர் செய்த நிலத்தை விநியோகிக்கின்ற பொறுப்பையும் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மூன்று செண்ட்டு கொடுக்கிறோம் சில இடங்களிலே , சில நேரங்களிலே அவர்கள் இந்த இடத்திலேயேதான் கொடுக்கப் படவேண்டுமென்று குறிப்பிட்ட இடத்தையே கேட்கிறார்கள் ஆனால் அந்த இடம் நஞ்சை நிலமாக இருக்கும் அல்லது அதிக விலையுள்ளதாக இருக்கும் அல்லது குறைந்த விஸ்தீரணம் உள்ளதாக இருக்கும். நானே சில இடங்களிலே 2 செண்ட்டுதான் கொடுக்கமுடியும் என்று உத்திரவிட்டிருக்கிறேன். காரணம் அந்த இடத்திலே இருக்கக்கூடிய விஸ்தீரணம், அதிக விலை அதிகமான மக்கள் எண்ணிக்கை இவற்றைப் பொறுத்து 2 செண்ட்தான் கொடுக்கமுடிகிறது. ஆனால் முறையாகக் கொடுப்பது 3 செண்ட்டு செண்ட்கூட கொடுக்கப்படுகிறது.

*437. வினா : திரு. என். இராஜாங்கம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

கடலூர் வட்டத்தில், கண்ணாடி, கன்னியங்குப்பம், குண்டியமல்லூர், பூவாணிக்குப்பம், பொட்டவெளி, தானஞ்சேரி, குப்பம்-குறிஞ்சிப்பாடி, அகரம் காலனி, தங்கனிக்குப்பம் (வடக்கு), ஆயிக்குப்பம் ஆகிய கிராமங்களுக்கு (அரிசனங்களுக்கு) மனைப்பட்டா வழங்க 1961-ம் ஆண்டு நடவடிக்கைகள் மேற்கொண்டும் இன்றுவரை மனைகள் வழங்கப்படவில்லை என்பதற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கண்ணாடி, பொட்டவெளி, குண்டியமல்லூர், குப்பம்-குறிஞ்சிப்பாடி, பூவாணிக்குப்பம், அகரம், தங்கவிக்குப்பம், ஆயிக்குப்பம்—

இக்கிராமங்களின் அரிசனங்களுக்கு வீட்டுமனைக்காக நில ஆர்ஜிதம் செய்ய மாவட்ட ஆட்சியரிடமிருந்து பிரிவு 4 (1) முன்மொழிவுகள் ஏதும் வரவில்லை. முன்மொழிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

கண்ணையங்குப்பம் : இக்கிராமத்தில் நில ஆர்ஜிதத்திற்கான உறுதிமொழி விளம்பரம் வெளியிடப்பட்டு தீர்ப்பு விசாரணை நடத்தப்பட்டது. விரைவில் நிலங்கள் கையகப் படுத்தப்பட்டு பட்டாக்கள் வழங்கப்படும்.

தானஞ்சேரி : இக்கிராமத்தில் நில ஆர்ஜிதத்திற்கான பிரிவு 4 (1) கீழ் முன்மொழிவு அறிக்கை வெளியிடப்பட்டு விட்டது. மேல் நடவடிக்கை தொடரப்படும்.